# KONGUNADU ARTS AND SCIENCE COLLEGE

(Autonomous)

Coimbatore – 641 029

Estd 1973

## Extension and Outreach Programs Conducted in Collaboration with Industry, Community and Non - Government Organisations

## Academic Year 2017-2018

| | |
|---|---|
| Name of the Activity | Awareness Programme on Environment |
| Organising Unit/ Agency/ Collaborating Agency | Nature Science Foundation, Coimbatore |
| Number of Students participated | 100 |

## சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு – 23.01.2018

கோயம்புத்தூர் இயற்கை அறிவியல் நிறுவனம் சார்பில் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு நிகழ்விற்கு 23.01.2018, செவ்வாய்க்கிழமையன்று சித்தாபுதூர் அரசு மேல்நிலைப் பள்ளி கலையரங்கில் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது.

இந்நிகழ்விற்கு கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் ஆ. கணபதி அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக சென்னை தேசிய பல்லுயிர் ஆணையத்தின் தலைவர் முனைவர் பி. மீனாகுமாரி அவர்கள் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார். இயற்கை அறிவியல் நிறுவனத்தின் பொருளாளர் திரு. இ. பொன்னுச்சாமி அவர்கள் விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் இலவச மரக்கன்றுகளை வழங்கினார். இவ்விழாவில் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் தாவரவியல் துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் முனைவர் எச். அப்துல் கபூர் அவர்கள் சிறந்த ஆசிரியருக்கான விருதினைப் பெற்றார்.

இந்நிகழ்வில் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் க. பழனிவேல் மற்றும் முனைவர் இரா. வேல்முருகன் ஆகியோர் நாட்டு நலப்பணித் திட்ட மாணவ – மாணவியர் 100 பேருடன் கலந்து கொண்டனர்.

நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)
கோயம்புத்தூர் - 641 029.



**English Translation:**

Nature Science Foundation of Coimbatore organised a One Day Programme on 23.01.2018 in Coimbatore Sidhapudhur, Government Higher Secondary School, Auditorium.

This function was presided by A. Ganapathy, Vice Chancellor, Bharathiar University. Chief Guest of this function is Dr. P. Meenakumari, Head, National Bio Diversity Commission, she distributed gifts and prizes to the various participants. Mr. E. Ponnusamy, Treasurer, Natural Science, provided free saplings to all the participants of the function. In this function Dr. H. Abdhul Kaffoor, Assistant Professor, Department of Botany, Kongunadu Arts and Science College received Best Teacher award.

Approximately 100 NSS students from Unit 4&5, along with the Coordinators, Dr. K. Palanivel and Dr. R. Velmurugan participated and enriched their knowledge.

Dr. K. PALANIVEL
M.A., M.Phil., Ph.D.,
NSS Programme Officer Unit - IV
Kongunadu Arts & Science College
Coimbatore - 641 029

PRINCIPAL
KONGUNADU ARTS & SCIENCE COLLEGE
COIMBATORE-641 029.

| | |
|---|---|
| Name of the Activity | Swachh Bharat Activities – Draw and Paint the Walls |
| Organising Unit/ Agency/ Collaborating Agency | Aram Foundation Charitable Trust, Coimbatore |
| Number of Students participated | 25 |

## தூய்மை பாரத திட்டம் சுவர் ஓவியம் வரைதல்

கோயம்புத்தூர் அறம் அறக்கட்டளை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் அலகுகள் 4 மற்றும் 5 ஆகியன இணைந்து **“தூய்மைப் பாரதம்”** திட்டத்தின்கீழ் **24.01.2018, புதன்கிழமை**யன்று காலை 08.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை போத்தனூர் தொடர்வண்டி நிலைய மதில் சுவர்களைத் தூய்மைப்படுத்துதல், வண்ணம் பூசுதல் மற்றும் ஓவியங்கள் வரைதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டன. இதற்காக நாட்டு நலப்பணித் திட்ட மாணவ – மாணவியர் 25 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் க. பழனிவேல் அவர்களின் வழிகாட்டுதலில் போத்தனூர் சென்று மேற்கூறிய பணிகளைச் செய்து முடித்தனர்.

நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)
கோயம்புத்தூர் – 641 029






**English Translation:**

Coimbatore Aram Foundation and NSS Unit 4&5 of Kongunadu Arts and Science College jointly organize the function Swachh Bharat Activities – Draw and Paint the Walls on 24.01.2018 Wednesday. The Volunteer group went to Pothanur Railway Station along with the respected Coordinators, there they cleaned the compound wall of the Railway station and they painted it. Along with that the volunteers cleaned the toilet rooms, verandas and the total area. To create awareness on Dengue and Malaria fever they cleaned the water tanks. The volunteers went to the nearest place to the railway station and they created awareness about global warming, importance of trees and women empowerment. The students drawn various diagrams related this and in the evening they reached the college.

PRINCIPAL
KONGUNADU ARTS & SCIENCE COLLEGE
COIMBATORE-641 029.

Dr. K. PALANIVEL
M.A., M.Phil., Ph.D.,
NSS Programme Officer Unit - IV
Kongunadu Arts & Science College
Coimbatore - 641 029

| | |
|---|---|
| Name of the Activity | "Save our Trees" – Cleaning Work (Banners & Advertising boards removed from Trees) |
| Organising Unit/ Agency/ Collaborating Agency | Coimbatore District Road Safety Welfare Association, Coimbatore |
| Number of Students participated | 37 |

**'மரங்களைக் காப்போம்' விழிப்புணர்வு மற்றும் தூய்மைப்பணி – 11.03.2018 மற்றும் 18.03.2018**

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் அலகுகள் 4 & 5 மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட சாலை பாதுகாப்புச் சங்கம் ஆகியன இணைந்து மரங்களைக் காப்போம் என்னும் பொருண்மையில் தூய்மைப் பணிகளை மேற்கொண்டன. இதற்கென கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகத்திலும், மின்சார அலுவலகத்திலும் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி காவல் ஆணையரிடமும் மனுக்கள் அளித்து முன்அனுமதி பெறப்பட்டது. கோயம்புத்தூர் மாவட்ட சாலை பாதுகாப்புச் சங்க ஒருங்கிணைப்பாளர் திரு. தேவேந்திரன் அவர்களின் வழிகாட்டுதலின் பேரிலும் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. பழனிவேல் அவர்களின் நெறிகாட்டுதலிலும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவத் தொண்டர்கள் 11.03.2018 ஞாயிற்றுக்கிழமையன்று 15 பேரும், 18.03.2018 ஞாயிற்றுக்கிழமையன்று 22 பேரும் தூய்மைப் பணிகளை மேற்கொண்டனர். என்.ஜி.ஜி.ஓ. காலனி முதல் கவுண்டம்பாளையம் பேரூராட்சி வரையிலும் சாலையின் இருமருங்கிலும் மரங்களில் கட்டப்பட்டுள்ள பேனர்கள், விளம்பரப்பலகைகள், பதாகைகள் ஆகியன அகற்றப்பட்டன.

(தன்னாட்சி)
கோயமுத்தூர் – 641 029.







மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள ஒரு மரத்தில் விளம்பர பலகை அகற்றப்பட்ட காட்சி.

மேட்டுப்பாளையம் ரோட்டில்

## மரங்களில் இருந்த விளம்பர பலகைகள் அகற்றம்

துடியலூர், மார்ச்.12-

கோவையில் இருந்து மேட்டுப்பாளையம் செல்லும் சாலையில் இருபுறமும் ஏராளமான மரங்கள் உள்ளன. இந்த மரங்களில் தனியார் மற்றும் அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள் ஆணி அடித்து விளம்பர பலகைகளை வைத்து இருந்தனர். இதனால் அந்த மரங்களின் வளர்ச்சி தடைபட்டு வந்தது. இதனை தொடர்ந்து மரங்களை பாதுகாக்கும் வகையில் விளம்பர பலகைகளை அகற்றும் பணி நேற்று நடைபெற்றது.

இதில் தேசிய நெடுஞ்சாலை துறை, கோவை மாவட்ட சாலைகள் பாதுகாப்பு சங்கம், தனியார் தொண்டு நிறுவனங்கள், கல்லூரி மாணவர்கள் உள்பட 100-க்கும் மேற்பட்டவர்கள் 3 குழுக்களாக பிரிந்து சென்று துடியலூர், வடமதுரை, தொப்பம்பட்டிபிரிவு, ராக்கிபாளையம் பிரிவு ஆகிய பகுதி வரை உள்ள மரங்களில் அடிக்கப்பட்டு இருந்த விளம்பர பலகைகளை அகற்றினர்.

இதில் தேசிய நெடுஞ்சாலை துறை உதவி பொறியாளர் ஜெயபிரகாஷ், முத்துகுமார், சாலைகள் பாதுகாப்பு சங்க தலைவர் வேணுகோபால், செயலாளர் தேவேந்திரன், துணை செயலாளர் சி.ஆர்.ராமசந்திரன் மற்றும் நிர்வாகிகள், கல்லூரி மாணவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி – 12-03-2018

---

### கோவை– மேட்டுப்பாளையம் சாலையில்

## மரங்களில் இருந்த விளம்பர பலகைகள் அகற்றம்!

பெ.நா.பாளையம், மார்ச். 11–

கோவையில் இருந்து மேட்டுப்பாளையம் செல்லும் சாலையில் இரு புறங்களிலும் புளியமரம், வேப்பமரம், புங்கைமரம் உட்பட பல மரங்கள் உள்ளன.

தனியார் பள்ளி, கல்லூரி, தொழிற்சாலைகள், நிறுவனங்களை சேர்ந்தவர்கள், பல்வேறு கட்சியினர் சாலைகளின் இருபுரங்களிலுள்ள மரங்களில் பிளக்ஸ், பேனர், வால் போஸ்ட் மற்றும் பிளாஸ்டிக் விளம்பர அட்டைகளை செய்து ஆணி அடித்து வைத்து விடுகிறார்கள்.

இதனால் மரங்களின் பாதிப்பு கேள்விக்குறியாகிறது.

மேலும் இந்த விளம்பரங்களை பார்க்கும் வாகன ஓட்டிகளுக்கு விபத்துகள் ஏற்படும் ஆபாயமும் உள்ளது.

இதற்காக இந்த மரங்களை பாதுகாப்பும் வகையில் தேசிய நெடுஞ்சாலை துறையினர், கோவை மாவட்ட சாலைகள் பாதுகாப்பு சங்கத்தினர், தனியார் தொண்டு நிறுவனங்கள், தனியார் கல்லூரி மாணவர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டவர்கள்



மேட்டுப்பாளையம் சாலைகளில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட மரங்களில் விளம்பர பலகைகள் மற்றும் ஆணிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். இவர்கள் 3 குழுக்களாக பிரிந்து ஒவ்வொரு மரங்களிலும் உள்ள விளம்பர பலகைகளை அகற்றினர்.

இந்த நிகழ்ச்சியில் தேசிய நெடுஞ்சாலை துறை உதவி பொறியாளர் ஜெயபிரகாஷ், முத்துகுமார், சாலைகள் பாதுகாப்பு சங்க தலைவர் வேணுகோபால், செயலாளர் தேவேந்திரன், துணை செயலாளர் சி.ஆர்.ராமசந்திரன் மற்றும் நிர்வாகிகள், கல்லூரி மாணவர்கள், தன்னார்வ தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**English Translation:**

NSS Unit 4 & 5 of Kongunadu Arts and Science College and Coimbatore District Road Safety Welfare Organisation Jointly organised a programme to protect and save our trees in our Coimbatore region. In this camp they planned to clean the particular places, so they got prior permission from Coimbatore Corporation Office, Electricity Board and from the Coimbatore City Police Commissioner. Coimbatore District Road Safety Welfare Association's Coordinator Mr. Devendiran and NSS Coordinator of Kongunadu Arts and Science College Dr. K. Palanivel guided our students. On this behalf 11.03.2018 Sunday, 15 of our students and on 18.03.2018 Sunday, 22 of our volunteer team made this cleaning work from NGGO Colony to Kavundampalayam. On this particular day our students helped to clean and remove the banner and advertisement boards which was tied on the trees.

PRINCIPAL
KONGUNADU ARTS & SCIENCE COLLEGE
COIMBATORE-641 029.

Dr. K. PALANIVEL
M.A., M.Phil., Ph.D.
NSS Programme Officer Unit - IV
Kongunadu Arts & Science College
Coimbatore - 641 029